**02.11.2022.**

**O.S. No.158/2021**

**PW.1 Chithra**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகின்றார்.**

**<u>1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக சொத்து குறித்த ஆவணங்களை நான் பார்த்த பிறகுதான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால், ஆம். வழக்கு தாக்கலுக்கு முன்பாக வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு (Ex.A8) அனுப்பியுள்ளேன் என்றால், சரிதான். Ex.A8 அறிவிப்பில் வழக்கு சொத்துக்கள் பரிவர்த்தனை மூலமாக என் தந்தையாருக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். பரிவர்த்தணை பத்திரத்திற்கு முன்பாக சொத்து யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பதை எனது அறிவிப்பில் சொல்லவில்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால், பரிவர்த்தனைக்கு முன்பாக சொத்து என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டதாகும். என் அப்பாவும், என் பெரியப்பா A.M.முருகேசனும் பரிவர்த்தனை பத்திரம் செய்து கொண்டுள்ளார்கள். என் பாட்டி தாதியம்மாள் மாதாச்செட்டி என்பவரை திருமணம் செய்துக் கொண்டு அவர் மூலம் பிறந்தவர்தான் A.M.முருகேசன் என்றால், சரிதான். மாதாச்செட்டி இறந்த பிறகு என் பாட்டி தாதியம்மாள் கோவிந்தசெட்டி என்பவரை 2வது திருமணம் செய்துகொண்டார் என்றால், சரிதான். அந்த திருமண உறவின் என் தகப்பனார் A.G.ராமன் பிறந்தவர் என்றால், சரிதான். வழக்குரையில் A.M.முருகேசனுக்கும், எனக்கும் உள்ள உறவுமுறை குறித்து சொல்லவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்த்திரனம் முதலியவைகள் எனக்கு தெரியுமா என்றால், சர்வே எண்.38, 39 மற்றும் ஒரு சர்வே எண் ஆகியவற்றில் மொத்தம் 3 ஏக்கர் பரப்பளவு சொத்து வழக்கு சொத்தாகும். மேலும் ஒரு வீடும் வழக்கு சொத்துக்களில் உள்ளடங்கியுள்ளது. பரிவர்த்தனை பத்திரத்தில் என் தந்தையாருக்கு வந்த சொத்துக்களைத்தான் வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். வழக்கு 1 முதல் 5

ஜயிட்ட சொத்துக்கள் 30.05.1978, 30.05.1978, 27.07.1978 ஆகிய தேதிகளில் மூன்று கிரய பத்திரங்கள் வழி A.M.முருகேசனால் கிரயம் பெறப்பட்ட சொத்துக்கள் என்றால், சரியல்ல. என் அப்பா மற்றும் பெரியப்பா A.M.முருகேசன் ஆகிய இருவரது சம்பாதியத்தில் வாங்கிய சொத்துக்களாகும். என் அப்பா A.G.ராமனும், A.M.முருகேசனும் சேர்ந்து 10.10.1974ஆம் தேதிய கிரய ஆவணத்தின் வழி கண்ணன்டஹள்ளி கிராமம், சர்வே எண். 38, 39, 40 ஆகிய சர்வே எண்களில் ஏக்கர் 9.16 பரப்பளவு சொத்துக்களை கிரயம் வாங்கினார்கள் என்றால், சரிதான். என் அப்பாவும், என் பெரியப்பாவும் சம்பாதித்து வாங்கிய சொத்துக்கள்தான் வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்கள் என்றால், சரிதான். என் அப்பாவும், என் பெரியப்பா A.M.முருகேசனும், கிரயம் வாங்குவதற்கு முன்பாக பூர்வீக சொத்துக்கள் எதுவும் அவர்களுக்கு இருந்ததில்லை என்றால், சரிதான். ஒரு வீடு, பூர்வீக சொத்தாக இருந்தது. என் அப்பாவும், பெரியப்பா A.M.முருகேசனும் சம்பாதித்த சொத்துக்களைத்தான் அவர்கள் இருவரும் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்றால், சரியல்ல. என் பாட்டி தாதியம்மாள் வாங்கிய சொத்தைதான் என் அப்பாவும், என் பெரியப்பா A.M.முருகேசனும் பரிவர்த்தனை செய்து கொண்டார்கள். நான் தற்போது சொல்லும் மேற்கண்ட கூற்றை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் பாட்டி தாதியம்மாள் சொத்துக்களை வாங்கினார் என சொல்வதற்கு எந்தவிதமான ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தா கோவிந்த செட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் கிடையாது என்றால், என் பாட்டி தாதியம்மாளும், கோவிந்தசெட்டியும் சேர்ந்து வாங்கித்தான் என் அப்பா பெயரிலும், என் பெரியப்பா பெயரிலும் எழுதி வைத்தார்கள். என் பாட்டி தாதியம்மாளும், கோவிந்தசெட்டியும் சேர்ந்து என் அப்பா பெயரிலும், என் பெரியப்பா பெயரிலும் சொத்துக்கள் வாங்கி வைத்தார்கள் என நான் தற்போது சொல்வதை எனது வழக்குரையில் எதுவும் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் அப்பா A.G.ராமனும், என் பெரியப்பா A.M.முருகேசனும் சுயமாக சம்பாதித்து வாங்கிய சொத்துக்களைத்தான் பரிவர்த்தனை ஆவணம் மூலம் பரிவர்த்தனை செய்து

கொண்டார்கள் என்றால், சரியல்ல. என் தாத்தா கோவிந்தசெட்டியும், பாட்டி தாதியம்மாளும் என் அப்பா பெயரிலும், என் பெரியப்பா A.M.முருகேசன் பெயரிலும் சொத்துக்கள் வாங்கி வைத்ததாக நான் பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. பூர்வீக சொத்துக்களை என் அப்பா விட்டுக் கொடுத்து பரிவர்த்தனை செய்துக் கொண்டுள்ளார் என நான் வழக்குரையில் சொல்லியிருப்பது தவறு என்றால், சரியல்ல. பூர்வீக சொத்துக்கள் எதுவும் இல்லை என்று எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக வேண்டி பூர்வீக சொத்துக்களை விட்டுக் கொடுத்து பரிவர்த்தனை செய்து கொண்டதாக வழக்குரையில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. பூர்வீக சொத்துக்களை விட்டுக் கொடுத்து பரிவர்த்தனை செய்து கொண்டதாக Ex.A8 அறிவிப்பில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் அப்பாவும், என் பெரியப்பாவும் பரிவர்த்தனை மூலம் மாற்றிக் கொண்ட சொத்துக்கள் அவர்களது தனிப்பட்ட சொத்துக்கள் என்றால், சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு Ex.A8ல் என் அப்பா எந்த எந்த சொத்துக்களை, யார் யாருக்கு விற்பனை செய்துள்ளார் என்ற விவரங்களை சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் அப்பா பரிவர்த்தனை மூலம் கிடைத்த சொத்துக்களில் சில சொத்துக்களை கௌரி, தங்கவேல், சுஜித், சுகுந்தன் ஆகியோர்களுக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், சரிதான். என் அப்பா பரிவர்த்தனை மூலம் கிடைத்த சொத்துக்களில் 5250 சதுர அடி பரப்பளவு சொத்தை தானமாக 3ம் எதிர்வாதி சுதாவிற்கு கொடுத்துள்ளார் என்றால், சரிதான். மேற்படி சொத்துக்களை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை. என் அப்பா ஒரு தங்கவேல் என்பவருக்கு விற்பனை செய்துள்ள சொத்துக்களை பொறுத்து இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால், கௌரியிடமிருந்துதான் தங்கவேல் கிரயம் வாங்கியுள்ளார். ஆதலால், அந்த நடடிக்கைகளை இவ்வழக்கில் சொல்லவில்லை. என் அப்பா கௌரிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரம், சுஜித், சுகுந்தன் ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரய பத்திரம், 3ம் எதிர்வாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள தான செட்டில்மண்ட் பத்திரம் ஆகிய ஆவணங்களில் என் தந்தையார் மட்டுமே எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், சரிதான். என் அப்பா எழுதிக் கொடுத்துள்ள மேற்படி ஆவணங்களின் நகல்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்கண்ட ஆவணங்களில் சொத்துக்கள் என்

அப்பாவிற்கு சுயார்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என கண்டு விற்பனை செய்துள்ளார் என்றால், அந்த விவரம் எனக்கு தெரியாது. என் அப்பா விற்பனை செய்த ஆவணங்களின் நகலை எடுத்து நான் பார்க்கவில்லை. எந்த ஆவணங்களை பார்த்து, என் அப்பா விற்பனை செய்த கிரய விவரங்களை தேதியுடன் சொல்கிறேன் என்றால், எனது அப்பா விற்பனை செய்த விவரங்கள் எனக்கு மகள் என்ற முறையில் நன்கு தெரியும். கிரய விவரங்களை எனது நினைவில் இருந்துதான் சொல்கிறேன். வழக்கு 6வது இன சொத்து என் பாட்டி தாதியம்மாள் 28.05.1955ஆம் நாளிட்ட கிரய ஆவணத்தின்படி கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் அந்த சொத்து என் அப்பாவிற்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்தாகும். வழக்கு 6வது இன சொத்து, என் அப்பாவிற்கு பாகத்தில் ஒதுக்கப்பட்ட சொத்து என வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. சொல்லியுள்ளேன். 13.08.1990 தேதியில் என் பாட்டி தாதியம்மாள் வழக்கு 6வது இன சொத்தை என் அப்பாவிற்கு தானமாக கொடுத்துள்ளதாக Ex.A1 ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். வழக்கு 6வது இன சொத்து என் அப்பாவிற்கு தானமாக வந்த சொத்து என்பதை வழக்குரையில் சொல்லாமல் மறைத்துள்ளேன் என்றால், சரியல்ல. என் அப்பாவிற்கு பாகமாக வந்த சொத்து, வழக்கு 6வது இன சொத்தாகும். தான பத்திரத்திற்கு பிறகு வழக்கு 6வது இன சொத்தில் என் அப்பா தார்சு வீடு கட்டி அனுபவித்து வந்தார் என்றால், சரிதான். வழக்கு 6வது இன சொத்து என் அப்பாவிற்கு தானமாக வந்த சொத்து ஆதலால், அச்சொத்து என் அப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றால், சரியல்ல. பரிவர்த்தனை மூலமும், தானசெட்டில்மன்ட் மூலமும் என் அப்பாவிற்கு வழக்கு சொத்துக்கள் வந்தடைந்தது என்றாலும், வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் அப்பாவின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும், அச்சொத்துக்களை பொறுத்து என் தந்தையார், 2ஆம் எதிர்வாதி ஜெயக்குமார் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால், என் அப்பா அவ்வாறாக எந்த உயில் ஆவணமும் யாருக்கும் எழுதி வைக்கவில்லை. உயில் எழுதிய பிறகுதான் என் அப்பா சுஜித், சுகுந்தன் ஆகியோர்களுக்கு 9 செண்ட் பரப்பளவு நிலத்தை விற்பனை செய்துள்ளார் என்றால், சரியல்ல. என் அப்பா 01.12.2018ஆம் தேதியில் இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் அப்பா காலமான பிறகு உயில்

மூலம் வந்த சொத்துக்களை 2ஆம் எதிரிவாதி ஜெயக்குமார் அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. என் அப்பா யாருக்கும், எந்த சொத்துக்களையும் பொறுத்து உயில் எழுதி வைக்கவில்லை. என் அப்பா இறப்பதற்கு முன்பு 4 மாத காலமாக எனது வீட்டில்தான் இருந்து வந்தார். என் அப்பா இறப்பதற்கு முன்பாக 4 மாத காலமாக என் வீட்டில் இருந்து வந்தார் என தற்போது சொல்லும் சங்கதியை வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான். என் அப்பா காலமான பிறகு உயில் ஆவணம் நடைமுறைக்கு வந்து அதன் அடிப்பபடையில் உரிய அதிகார அமைப்புகளிடம் 2ஆம் எதிர்வாதி விண்ணப்பித் பட்டா வாங்கியுள்ளார் என்றால், சரியல்ல. என் அப்பா உயிலாவணம் எதுவும் எழுதி வைக்கவில்லை. 2ஆம் எதிர்வாதி வழக்கு சொத்துக்களை அடமானம் வைத்து மத்திய கூட்டுறவு வங்கியில் பயிர் கடன் வாங்கியுள்ளார் என்றால், என் அப்பா உயிலாவணம் எதுவும் எழுதவில்லை. என் அப்பா 2ஆம் எதிர்வாதி பெயரில் உயிலாவணம் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கும், எனது சகோதரியான 3ஆம் எதிர்வாதிக்கும் நன்றுகு தெரியும் என்றால், சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால், சரியல்ல. உயில் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களில் ஒரு பகுதி சொத்தான சர்வே எண். 180 /1 ஏக்கர் 1.17 பரப்பளவை பொறுத்து 15.03.2021ஆம் தேதியில் 2ஆம் எதிர்வாதி ஜெயக்குமாரும், 4ஆம் எதிர்வாதி சேகரும் கிரய ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்றால், அது பொய்யாகும். உயில் ஆவணம் எதுவும் எழுதியிருக்காதபோது கிரய ஒப்பந்தம் செய்ய 2ஆம் எதிர்வாதிக்கு உரிமை எதுவும் இல்லை. 2ஆம் எதிர்வாதிக்கு ஆதரவாக என் அப்பா எழுதியுள்ள உயில் பதிவு செய்யப்பட்ட உயிலாவணம் என்றால், என் அப்பா உயிலாவணம் என்ற ஒன்றை எழுதவே இல்லை. உயிலாவணத்தின் பதிவு நகலை எடுத்து பார்த்திருக்கிறேன என்றால், என் அப்பா உயிலாவணமே எழுதி வைக்கவில்லை என்கிறபோது, அதை நான் எடுத்து பார்க்க வேண்டிய தேவையே எனக்கு எழவில்லை. 2015ஆம் வருடத்தில் இருந்து 2018ஆம் வருடம் வரை, - என் அப்பா இறக்குவரை, நல்லபடியாகத்தான் இருந்து வந்தார் என்றால், சரிதான். என் அப்பா இறப்பதற்கு முன்பாக 13 வருட காலமாக ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டு அதற்காக மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டு வந்தார். என் அப்பாவிற்கு உடல்நிலை சரியில்லை, ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்

என நான் தற்போது சொல்வதை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால், சரிதான். 4ஆம் எதிர்வாதி சேகர் பெயரில், கிரய ஒப்பந்தம் செய்த பிறகு, நானும், 3ஆம் எதிர்வாதியும் சேர்ந்து சட்ட விரோதமாக பலனடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், சரியல்ல. என் அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்தைத்தான் அவர் 2ஆம் எதிர்வாதிக்கு உயில் மூலம் பாத்தியப்பட்டுத்தியுள்ளார் என்றாலும், அதில் எனக்கு பாக உரிமை ஏதும் இல்லை என்றாலும், சரியல்ல. நான் பாகம் கேட்டதாகவும், அதற்கு 1 எதிர்வாதி ஒத்துழைக்கவில்லை எனவும், நான் எனது வழக்குரையில் சொல்லியிருப்பது எல்லாம், வழக்கிற்காக வேண்டி சொல்லப்பட்டுள்ள வெற்றுரைகள் என்றால், சரியல்ல. வழக்கு சொத்துக்கள் 2ஆம் எதிர்வாதி ஜெயக்குமாரின் அனுபவத்தில்தான் இருந்து வருகிறது என்றால், சரிதான். ஆனால் என் அப்பாவின் காலத்திற்கு பிறகு எனக்கும், 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கும் வழக்கு சொத்துக்களில் உரிமை உள்ளது. உயில் படி வழக்கு சொத்துக்கள் முழுவதும் 2ஆம் எதிர்வாதிக்கு மட்டுமே பாத்தியம் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

(4ஆம் எதிர்வாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். 1 முதல் 3 எதிர்வாதிகள் தரப்பில் செய்யப்பட்டுள்ள குறுக்கு விசாரணையை 4ஆம் எதிர்வாதி அப்படியே ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கிறார்.)

R SAKTHIVEL

PRINCIPAL DISTRICT JUDGE
Digitally signed by R SAKTHIVEL
Location: KRISHNAGIRI